திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஒருவழிப் பாதையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். உதாரணமாக பிராட்வே போன்ற பாதைகளை ஒருவழிப் பாதையாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் ஒருவழிப் பாதையாக ஆக்குவது என்பது முடியாது. சாத்தியமான இடங்களில் ஒருவழிப் பாதையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களிலுள்ள போக்குவரத்து வசதிகள் போலல்லாமல், சென்னை நகரம் டவுன் பஸ் போக்குவரத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கும். இன்று கூவம் நதித் திட்டம் சீரானால் போக்குவரத்தைத் துரிதப்படுத்த முடியும். மேலும் மின்சார ரயில்களை அதிகமாக விடுவதன் மூலமும், சென்னை நகரைச் சுற்றி சுற்று ரயில் விடுவதன் மூலமும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி செய்யுமா? அப்படி ஏற்படும் திட்டத்திற்கான பெரும்பகுதிச் செலவை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சர்க்குலர் ரயில் அமைக்க வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

சிதம்பரம் அருகேயுள்ள அத்திப்பட்டு சாலை

*250 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சிதம்பரம்–சீர்காழி ரோட்டில் பழைய கொள்ளிடம் ஓரம் போகும் அத்திப்பட்டு ரோட்டில் (உப்பனாற்றங்கரையில்) சுமார் $2\frac{1}{2}$ மைல் தூரம் கப்பி அடிக்கப் படாமல் சீர்க்கேடாகக் கிடப்பது விஷயமாக பொதுமக்களிடமிருந்து ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

*Bus guides and fare tables*

*251 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government has decided to instruct the State Transport Department to issue bus guides and fare tables and proper notice boards for the information of travelling public?